2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

224—

வட்டாட்சியர் அலுவலகம்

***8189—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதிக்கென்று தனியாக வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் (வடக்கு) வட்டத்திற்கான வட்டாட்சியர் அலுவலகம், பொதுமக்கள் எளிதில் வந்து செல்லக்கூடிய வகையில், போக்குவரத்து வசதி மிகுந்த நகரின் மையப் பகுதியில்தான் தற்போது அமைந்துள்ளது. எனவே, தற்போதைய வட்டாட்சியர் அலுவலகத்தினை புதிய இடத்தில் அமைத்திட வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் (வடக்கு) தொகுதியில் சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். அந்தத் தொகுதி 10 ஊராட்சிகளையும், 29 வார்டுகளையும் உள்ளடக்கிய தொகுதியாகும். வெளி மாவட்ட, வெளி மாநில தொழிலாளர்கள் பனியன் கம்பெனிகளில் வேலை செய்து வருகின்றனர். தற்போது, அவினாசி வருவாய் வட்டத்தில் திருப்பூர் (வடக்கு) தொகுதியில் எட்டு கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை*

அவினாசி வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால், கொங்குபாளையம் ஊராட்சி, கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதிகள் மற்றும் 29 வார்டுகள் திருப்பூர் வருவாய் வட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, அவினாசி வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள எட்டு ஊராட்சிகளும், திருப்பூர் வருவாய் வட்டத்தில் சேர்க்கப்பட்ட கொங்குபாளையம், கணக்கம்பாளையம் ஊராட்சிகள் மற்றும் 29 வார்டுகளை உள்ளடக்கிய புதிய வருவாய் வட்டத்தை திருப்பூர், பெருமாநல்லூர் சாலையிலுள்ள பாண்டியன் நகர் பகுதியை தலைமையிடமாகக் கொண்டு, பெருமாநல்லூர், திருப்பூர் (வடக்கு) தொகுதி மக்களுக்கு புதியதாக வருவாய் வட்டத்தை உருவாக்கித் தந்தால், திருப்பூர் தெற்கு தொகுதியிலுள்ள வருவாய் வட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உருவாக்கித் தருவார்களா என்று கேட்கிறீர்கள், அப்படிதானே? (குறுக்கீடு) இனிமேலும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருப்பூர் (வடக்கு) தொகுதிக்கென்று தனியாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். எதிர்காலத்தில், புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுகின்ற நேரத்தில், இதைக் கவனத்தில்கொண்டு, பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: திருப்பூர் (வடக்கு) தொகுதியில் இருக்கிற மக்களெல்லாம் தெற்கு தொகுதியில் கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் செல்ல வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருங்காலத்தில் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள், நன்றிதான் சொல்ல வேண்டும்.

முற்பகல் 10–35

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள தொட்டிப்பாளையம் வருவாய்க்

2022 மே 5]

கிராமமானது தமிழ்நாட்டிலே மிக அதிகமாக சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமமாகும். இதை மூன்று வருவாய் கிராமங்களாகப் பிரித்தால், பொதுமக்கள் கிராம நிருவாக அலுவலகத்திற்கு எளிதாகச் சென்று தங்களது பணிகளைச் செய்ய முடியும். ஆகவே மக்கள் மிகுந்த பகுதியான தொட்டிப்பாளையம் வருவாய்க் கிராமத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா? அதுமட்டுமல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். (குறுக்கீடு) நீங்கள் தாலுகா கேட்டீர்கள். இப்பொழுது கிராமத்திற்கு வந்துவிட்டீர்கள், அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்கிறீர்கள். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலைக் கேட்போம். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை ஒரு மனுவாக என்னிடத்தில் எழுதிக் கொடுத்தார்கள் என்று சொன்னால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் அவர்களையும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில், வத்தலக்குண்டு பேரூராட்சியில் இடியக்கூடிய நிலையிலுள்ள கிராம நிருவாக அலுவலகத்தை மக்கள் நலன் கருதி பழைய கட்டடத்தை அகற்றி புதிய கிராம நிருவாக அலுவலகம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நிறைய கிராம நிருவாக அலுவலகங்களெல்லாம் இடிந்துபோகும் சூழ்நிலையிலும், பயன்படுத்த முடியாத சூழ்நிலையிலும் இருக்கின்றன. அவ்வாறு பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் பக்கத்திலுள்ள வேறு அரசாங்கக் கட்டடங்களில் V.A.O. அலுவலகங்களெல்லாம் செயல்படுவது குறித்து அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நிதிநிலைக்கேற்ப வருடாவருடம் புதிதாக V.A.O. அலுவலகங்கள் கட்ட இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவக்கப்பட்ட தாலுகாக்களுக்கு புதிய கட்டடங்கள் அமைத்துத் தரப்படுகின்றன. ஆனால் பழைய தாலுகா அலுவலகங்கள் வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களிலேயே பல்வேறு இடங்களில் இருந்துகொண்டிருக்கின்றன. இடவசதி இல்லாமல் அங்கிருக்கின்ற அலுவலர்களும், பொதுமக்களும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்த கட்டடங்களையெல்லாம் புதிதாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனத்தைச் செலுத்தி அப்படிப்பட்ட பழைய அலுவலகங்களையெல்லாம் மொத்தமாக புதியதாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா? அதேபோன்று பல்வேறு Revenue கிராமங்கள் பிரிக்கப்படாமல் இருக்கின்றன. அந்த Revenue கிராமங்களையெல்லாம் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில்; நிறைய இடங்களுக்குப் புதிதாகக் கட்டடங்கள் வேண்டியிருக்கின்றன. அதை மாண்புமிகு

2022 மே 5]

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று வருங்காலங்களில் எந்தெந்த இடங்களுக்கெல்லாம் தேவை என்பதை அறிந்து, முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். எந்தெந்த அலுவலகங்கள் மிக மோசமாக இருக்கின்றன என்பது குறித்த விவரங்களை மாவட்ட ஆட்சியர்களிடத்தில் நாங்கள் கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் எந்தெந்தக் கட்டடங்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றன என்பதைப் பார்த்து அதற்கு முன்னுரிமை கொடுத்து செய்யப்படும். இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 புதிய கட்டடங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் இன்னும் அதிகமான கட்டடங்கள் தேவை என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நிச்சயமாக அந்தப் பணியை நாங்கள் செய்துகொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் தாலுகாவில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக உருவாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற மனுக்களையெல்லாம் நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புகிறோம். எல்லாவற்றுக்கும் தகுதி இருக்குமென்று சொல்ல முடியாது. எவற்றுக்கு தகுதி இருக்கின்றதோ, அந்த தகுதி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் அவற்றையெல்லாம் பிரித்துக் கொடுப்பதற்கான பணிகளைச் செய்ய இருக்கிறோம். எதிர்காலத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நிச்சயமாக அந்தப் பணிகளைச் செய்துகொடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். கேள்வியைக் கேட்டுவிட்டு வெளியில் போய்விடுகிறீர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. நேற்றைக்கும் ஒரு முக்கியமான கேள்வி கேட்டேன். இன்றைக்கு ஒரு வாய்ப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வந்துவிடுங்கள். கேள்வி மறந்துவிட்டதா?*

திரு. S. சதாசிவம்: *இல்லை, மறக்கவில்லை, மறக்கவில்லை. மேட்டூர் தொகுதியில் மேச்சேரி ஒன்றியத்தில் 1,40,000 மக்கள் வசிக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தனி தாலுகாவாக அறிவித்து கூனாண்டியூர் ஊராட்சியில் ஒரு V.A.O. அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்ன அதே பதில் இந்தக் கேள்விக்கும் பொருந்தும். ஒரு காலத்தில் தாலுகா அலுவலகம் பரவலாக இருந்தாலும்கூட பரவாயில்லை என்றிருந்தது. தற்போது அந்தக் காலம் மாறி, தேவை என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டிருக்கிறது. எனவே, அதனையெல்லாம் மனதிலே கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எந்தெந்த இடங்களுக்குத் தேவை, எந்தெந்த இடங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து நிச்சயமாக எதிர்காலத்தில் செய்து கொடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.*

2022 மே 5]

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கரிலே வட்டாட்சியர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு ஓராண்டு காலம் ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. அது எப்போது திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. முனிரத்தினம் அவர்கள் இதுகுறித்து என்னிடத்தில் கூறினார்கள். இன்றைக்கே அதைப் பற்றி கேட்டு, உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும். ஓராண்டு காலமாக ஏன் திறக்கப்படவில்லை என்பது தெரியவில்லை. நிச்சயமாகக் கேட்டு, உடனடியாக அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி மலைவாழ் மக்கள் நிறைந்த தொகுதியாகும். மலைவாழ் மக்கள் சாதிச் சான்றிதழ் பெற வேண்டுமானால், கிட்டத்தட்ட 70 கி.மீ. தூரம் ராசிபுரம் சென்று சாதிச் சான்றிதழ் பெற வேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எந்த ஊருக்கு வட்டாட்சியர் அலுவலகம் வேண்டும் என்பதைக் கேளுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள நாமகிரிப்பேட்டையில் வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் எளிதில் அணுகக்கூடிய அளவிற்கு அலுவலகம் இருக்க வேண்டும் என்ற நியாயத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி ஆலோசித்து, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

சிப்காட் வணிக வளாகம்

***6750—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் சிப்காட் வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் சிப்காட் வணிக வளாகம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஆந்திர மாநிலத்தினுடைய வட எல்லையில் உள்ள தொகுதி. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய தொகுதி. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய*